<u>அ.வ.எண்.**118/2018**          வா.சா.**1**–செந்தில்நாதன்      **18.07.2025**</u>

**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 3 முதல் 6, 8 முதல் 13, 15, 18, 19, 21 முதல் 23, 28 முதல் 30, 32 முதல் 36, 38, 39, 42, 43, 45, 46, 48 முதல் 53, 56 முதல் 65, 69 முதல் 72, 74, 77 முதல் 86, 88 முதல் 97, 99, 100, 102, 103, 105, 107, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் மற்றும் 14, 27, 37, 44, 55, 75, 98 மற்றும் 24 முதல் 26, 31, 87 மற்றும் 40, 54, 67, 68, 76, 104, 106 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

நீங்கள் உங்கள் வழக்குரையில் ஆனுரம்மன் கோவிலில் வழிபாடு செய்பவர் என்ற முறையிலும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறவில்லை என்று சொன்னால் தவறு. வா.சா.ஆ.1 ஆவணத்தின் நகல் எங்கு எடுக்கப்பட்டது என்றால் சென்னை கரூவூலத்தில் இருந்து எடுக்கப்பட்ட நகலாகும். வா.சா.ஆ.1 உங்களால் பராமரிக்கப்படவில்லை என்று சொன்னால் தவறு. வா.சா.ஆ.1 ஆவணத்தினை பொறுத்து கேள்வி கேட்டால் உங்களால் பதில் சொல்ல இயலுமா அல்லது HR&CE துறையினர்தான் பதில் சொல்வாரா என்றால் எனக்கு தெரிந்த வரை பதில் சொல்ல இயலும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவாச்சொத்து ஊழிய மான்யத்திற்கு உட்பட்டு இனாம் கொடுக்கப்பட்டுள்ளது என்று கண்டுள்ளதா என்றால் என்று கண்டுள்ளது. தாவாச்சொத்துக்களைப்

பொருத்து ஒரு இனாம் செட்டில்மெண்ட் அதிகாரி மூலமாக ஒரு சில சொத்துக்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி இனாம் செட்டில்மெண்ட் உத்தரவினை குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் இரண்டு பூசாரிகளின் பெயர் உள்ளதா என்றால் உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படும்போது தாவாச்சொத்துக்கள் கோவிலின் சார்பாக அந்த பூசாரிகளின் அனுபவத்தில்தான் இருந்தது என்று சொன்னால் அனுபவிக்க மட்டும்தான் பூசாரிகளுக்கு உரிமை உண்டு. 01.07.1963 வரை வா.சா.ஆ.1 ஏற்பட்டதிலிருந்து உங்களது கோவில் இந்து அறநிலையத்துறை வசம் இருந்தது என்பதற்குண்டான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 01.07.1963 க்கு பின்னர் இன்றைய தேதிவரை தாவாச்சொத்துக்கள் கோவில் வசம் உள்ளது என்பதற்குண்டான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1986 ஆம் ஆண்டிற்கு பின்னர் நிலவுடமை மேம்பாட்டுத்திட்டத்திற்கு பின்னிட்டு வருவாய் துறை ஆவணங்களான பட்டா, அ பதிவேடு, புல வரைபடம் ஆகியவை இந்த வழக்கில் நீங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளோம், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்களில் கண்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆவணம் அடிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் ஏன்

அடிக்கப்பட்டுள்ளது என்பதற்கு உங்களது முதல் விசாரணை வாக்குமூலத்தில் விளக்கம் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லவில்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தில் 5 வது பத்தியில் உள்ள சங்கதிகளை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா என்றால் கண்டுள்ளது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் 5 வது பத்தியில் **"இத்திருக்கோவிலுக்கு சொந்தமாக இனாம் ஒழிப்பு விசாரணைக்கு முன்பாக இருந்த 30.27 நிலங்களில் இனாம் ஒழிப்பு விசாரணையின்போது தனிநபர்களுக்கு பட்டா வழங்கப்பட்ட நிலங்கள்போக பட்டா வழங்கப்பட்டுள்ள 23.26 புஞ்சை நிலங்கள் தற்போது திருக்கோவிலின் சுவாதீனத்தில் இல்லாமல் தனியார் ஆக்கிரமிப்பில் உள்ளதை மீட்கவும், தனிநபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ள நிலங்களை மீட்க சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவும்"** மேலே குறிப்பிட்டுள்ள சரத்துக்களுக்கு நீங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்ய இயலாது என்று சொன்னால் சரியல்ல. டிரஸ்ட்டில் ஏற்பட்ட தீர்மானத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தேவைப்படும்போது தாக்கல் செய்கிறேன். வா.சா.ஆ.4 ஆவணம் வழக்கிற்காக நீங்கள் தயார் செய்த ஆவணம் என்று சொன்னால் தவறு. வா.சா.ஆ.5 ஆவணமான கிரையப்பத்திரம் மற்றும் வா.சா.ஆ.6 ஆவணமான குத்தகை பத்திரத்தில் உள்ள சரத்துக்கள் சரியா என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணங்களின் அடிப்படையில்

எழுதிக்கொடுத்த நபர்களின் வசம் சுவாதீனம் இருந்ததா என்றால் கோவில் சுவாதீனத்தில் அவர்கள் ஊழியம் மட்டும் செய்து கொண்டிருந்தார்கள். செட்டில்மெண்ட் தாசில்தார் செய்த உத்திரவினை நீங்கள் பார்த்துள்ளீர்களா என்றால் நேற்று காட்டியபோது பார்த்துள்ளேன். நேற்று பார்த்தேன், அதை நான் சரியாக படிக்கவில்லை. அந்த ஆவணம் படிக்கக்கூடிய அளவில் இல்லை, அதனால் என்னால் ஊழிய மான்யத்திற்குட்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளதா என்று சொல்ல இயலாது. வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் வழக்குச்சொத்துக்களைப் பொருத்து பிரதிவாதிகள் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்கள் என்றும், மேற்படி இரண்டு வழக்குகளுக்கும் எதிராக கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் சரியாக ஞாபகம் இல்லை, வழக்கறிஞரை கேட்டால்தான் தெரியும். நீங்கள் முதன் முதலாக வழக்கு தாக்கல் செய்யும்போது 113 நபர்களை ஏன் பிரதிவாதிகளாக சேர்க்கவில்லை என்றால் கிரையங்கள் தவறானது என்பதால் சேர்க்கவில்லை. உங்களுடைய வழக்குரையில் கிரையம் ஏற்பட்ட விபரங்கள் முதன் முதலில் எப்போது தெரியும் என்று சொல்லியுள்ளீர்களா என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. வழக்குச்சொத்துக்கள் கோவில் அனுபவம் செய்து வருகிறது என்று நீங்கள் எப்படி அனுபவம் செய்தீர்கள் என்று குறிப்பதற்காக ஆவணம் எதுவும்

தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளோம். வழக்குச்சொத்திற்கு வரி இரசீது கோவில் சார்பாக கட்டியுள்ளீர்களா என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. 01.07.1963 க்கு பிறகு வட்டாட்சியர் சொத்தை சுவாதீனம் எடுத்து வாதி கோவிலுக்கு கொடுத்ததாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியாக ஞாபகம் இல்லை. வழக்குச்சொத்து 01.07.1963 க்கு பிறகு உரிமையோ, அனுபவமோ வாதியின் கோவிலுக்கு இல்லையென்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 Inam Fair Register 01.07.1963 க்கு பிறகு சட்டப்படி இல்லா நிலை ஆவணம் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் தாசில்தார் பிரதிவாதிகளின் கிரையதாரர்களுக்கு பட்டா வழங்கிய பின்னர் கோவிலுக்கு தாவாச்சொத்தில் எவ்விதமான உரிமையோ, அனுபவமோ இல்லையென்றால் சரியல்ல. தாவாச்சொத்துக்களில் இந்த கிரையதாரர்கள் நல்லெண்ணத்தின்பால் கிரையம் பெற்று அவரவர்கள் கிரையம் பெற்ற இடத்தை அனுபவம் செய்து கொண்டும், கூட்டுப்பட்டாவாக வருவாய் ஆவணங்களை மாற்றிக் கொண்டும், மற்ற இடங்களில் 1, 2 பிரதிவாதிகள் ஆன்மீக நோக்கத்கத்திற்குரிய செயல்களை செய்துகொண்டு வருகிறார்கள் என்று எனக்கு தெரிந்துகொண்டும், அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்துக்களை நீதிமன்ற ஆணையர்

பார்வையிட்டாரா என்றால் பார்வையிட்டார். நீதிமன்ற ஆணையர் நாளது தேதிவரை அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் பிரதிவாதிகள் நீதிமன்ற ஆணையர் அறிக்கையை தாக்கல் செய்ய ஒத்துழைக்கவில்லை. பிரதிவாதிகள் ஒத்துழைக்கவில்லை என்ற விபரத்தை நீதிமன்ற கவனத்திற்கு கொண்டு சென்றீர்களா என்றால் குறிப்பாணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம். நீங்கள் நீதிமன்றத்தில் நீதிமன்ற ஆணையர் பூர்வாங்கும் அறிக்கையை தாக்கல் செய்தால் பிரதிவாதிகள் சுவாதீனத்தில் இருக்கும் விபரம் தெரியவரும் என்பதால் நீங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்கதான் நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.